**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts05sp052026.14
https://ngmtamil.in/

# A Historical Perspective on *Nisata Pooja* (Daily Worship)—Its Sacred Offerings and Significance—and The Charitable Endowments Associated with It, Based on Epigraphical Evidence Derived from Various Temples.

**Dr.P.Deepa***,
Assistant Professor and Head, Dept of History, Sri Ram Nallamani Yadava Arts and Science College, Tenkasi – 627804.
*Correspondence: deeluxmathi@gmail.com.

**Article Info**
Received on 15-May-2026, Revised on 18-May 2026, Accepted on 20-May-2026, Published on 27-May-2026

## ABSTRACT

“Thiruamudhu" (Sacred Food Offerings) represents one of the rare and noble traditions practiced by our ancestors, a legacy too profound to be either rejected or forgotten. The temple inscriptions of our Tamil Nadu serve as an archive dating back a thousand years—a historical repository unparalleled anywhere else in the world. Temples, which served as the focal points of society, were administered through organizational structures meticulously planned and established by Tamil ancestors. Due to their devotion and concern for the community, they properly managed the donations given to the gods, performed pujas, and performed the divine service properly. Consequently, they felt that—by the grace of God—both the land and its people flourished. Ritual worship served as the pivotal act connecting the people with the Divine. The main event of such worship was the offering of Thiruamuthu (sacred food) to the Deity. Rather than viewing the offering of Thiruamuthu (sacred food) to the Divine merely as a ritualistic act, the ancestors of the Tamil land performed countless acts of charity and benevolence, believing that such deeds would ensure the well-being of their king, their nation, and their families. With the intention that the charitable endowments thus made should be known to many—and that the records serving as witnesses to these donations should endure forever—they had them inscribed as epigraphs upon the stone walls of the temples where the Deity resides. The details regarding the endowments made specifically for the Thiruamuthu (sacred food) offerings convey to us the profound significance attached to such acts of charity.
To facilitate the offering of Thiruamuthu (sacred food), donations were bestowed in various forms—including land, villages, gold, tax revenues, and paddy. Everyone—ranging from the King, members of the royal family, officials, Brahmins, trade groups, and individuals—contributed donations for the purpose of the Thiruamuthu (sacred food) offering.

One who has studied references to “Thiruamudhu” (sacred food) found in inscriptions—and has also observed the rituals of offering Thiruamuthu (sacred food) to the deity in contemporary temples—is able to discern the manner in which worship protocols and the practices surrounding these Thiruamuthu (sacred food) offerings have evolved. This research paper on “Thiruamudhu” has been structured specifically to elucidate this very distinction.

**Keywords**; *Thiruamuthu, Amuthupadi, Santhi, Arthasamam, Naanaali, Nivantham.*

# நிசத பூசையில் திருஅமுதும் அதன் சிறப்புகளும், அதற்கான தானங்கள் பற்றியும் சில கோயில் கல்வெட்டு சான்றுகளின் அடிப்படையில் ஒரு வரலாற்றுப் பார்வை

***முனைவர்: பொ.தீபா.,** உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
ஸ்ரீ ராம் நல்லமணி யாதவா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
தென்காசி – 627804.

**ஆய்வுச் சுருக்கம்**:

திருஅமுது – கல்வெட்டுகளில் நம் முன்னோர்கள் பின்பற்றிய மறுப்பதற்கும், மறப்பதற்கும் அரிய மாண்புகளில் ஒன்று. உலகில் வேறு எங்கும் காணமுடியாத ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய ஆவணகாப்பகமாக இருப்பது நமது தமிழக கோயில் கல்வெட்டுகள். சமூகத்தின் தலைமை இடமாக இருந்த கோயில்கள் சான்றோர்களால் மிகவும் தெளிவாக திட்டமிட்டு உருவாக்கப்பட்ட நிர்வாக அமைப்புகளால் நிர்வகிக்கப்பட்டன. பக்தியும் சமூகத்தின் மீது கொண்ட அக்கறையும் காரணமாக அவர்கள் இறைவர்க்கு கொடுக்கும் தானங்களை முறையாக நிர்வகித்து அதன் மூலம் பூசைகளை நிறைவேற்றி இறை பணியை முறையாகச் செய்தனர். இதனால் இறை அருளால் நாடும் மக்களும் செழிப்படைவதாக உணர்ந்தனர். மக்களையும் இறைவனையும் இணைக்கும் முக்கிய செயலாக பூசைகள் இருந்தது. அப்பேற்பட்ட பூசையின் முக்கிய நிகழ்வே இறைவர்க்கு திருஅமுது படைப்பதாகும். திருஅமுது என்பது இறைவனுக்கு உணவு படைக்கும் ஒரு செயலாக மட்டும் கருதாமல், அதனால் தங்கள் அரசனும், நாடும், குடும்பமும் நலமுடன் வாழ்வார்கள் என்று எண்ணி கணக்கில் அடங்காத தான தர்மங்களை தமிழ்ச் சான்றோர்கள் செய்துள்ளனர். அவ்வாறு செய்த தானங்களை பலரும் அறிய வேண்டும், தானத்திற்கான சாட்சிகள் அழியாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இறைவன் உறையும் கோயில் கற்களில் கல்வெட்டுகளாக எழுதி வைத்தனர். திருஅமுதுக்காக வழங்கப்பட்ட தானங்களின் செய்திகள் அவற்றிக்கான முக்கியத்துவத்தை நமக்குச் சொல்கின்றன. திருஅமுது வழங்கும் பொருட்டு நிலம், ஊர், பொன், வரி, நெல் என அனைத்து வழிகளிலும் தானங்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசன், அரசனின் குடும்ப உறுப்பினர்கள், அதிகாரிகள், அந்தணர்கள், நகரத்தார்கள், தனி நபர்கள் என அனைவரும் திருஅமுதுக்காக கொடை கொடுத்துள்ளனர்.

கல்வெட்டுகளில் திருஅமுது பற்றிய செய்திகளையும் படித்து, இன்றைய காலத்தில் கோயில்களில் இறைவனுக்கு வழங்கும் திருவமுது நிகழ்வுகளையும் பார்த்த ஒருவரால் பூசை முறைகளும் திருஅமுது நிகழ்வுகளும் எவ்விதம் வேறுபட்டுள்ளன என்பதை அறிந்து கொள்ள இயலும். இந்த திருஅமுது பற்றிய ஆய்வு கட்டுரையும் அதை தெரிவிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்**: திருஅமுது, அமுதுப்படி, சந்தி, அர்த்தசாமம், நாநாழி, நிவந்தம்.

**முன்னுரை**:

கோயில் என்பது ஆதி அந்தம் இல்லாத இறைவன் உறையும் இடமோ அல்லது மக்கள் வழிபடும் இடமோ மட்டும் அல்ல. அதற்கும் மேலாக தனி மனிதனை சமூகமாக மாற்றி ஒன்றாக செயல்பட வைக்கும் இடமாகும். அங்கு இறைவழிபாடு என்பதை விட மக்களின் பண்பாடுகளை நிலை நிறுத்தும் மையம் என்பதே முக்கியம். அக்கால சமூகத்தின் முக்கிய செயல் முறைகளான விவசாயம், வணிகம், கலை, கட்டிட தொழில் நுட்பம், வானசாஸ்திரம், வணிக அளவு முறைகள், முறைப்படுத்தப்பட்ட நிர்வாகம், ஆகம விதிமுறைகள் என எண்ணற்ற செயல்பாடுகளை கோயில் என்ற ஒற்றை தலைமை தன்னுள் வைத்திருந்தது. அவற்றில் ஒன்றான இறைவர்க்கு விருந்தோம்பல் என்னும் திருஅமுது பற்றிய விளக்கமும், சமூகத்தில் அதற்கான உயரிய மதிப்பு பற்றியும், திருஅமுதுக்காக வழங்கப்பட்ட தானங்கள் பற்றியும், கல்வெட்டுகளில் திருஅமுதுக்கான முக்கியத்துவமும் இங்கே எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அரசனும் அடிபணியும் இடமாக இருந்த கோயில்களில் பூசைகள் முறையாகவும், சிறப்பாகவும் செயல்பட்டால் நாடு செழித்து மக்களும் நல்வாழ்வு பெறுவார்கள், இல்லையெனில் வானமும் பொய்த்து விடும். இதையே வள்ளுவப் பெருந்தகை

“சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்கு மேல் வானோர்க்கும் ஈண்டு.”

**கோயில் தோன்றக் காரணம்:**

“கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்”. – அறிய நூல்களை கற்றறிந்து இருந்தாலும் அரியதும் தூய்மையானதும் ஆகிய இறைவனது அடிகளை தொழாமல் இருப்பதால் எவ்வித பயனும் இல்லை என்பதை அறிந்தே கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய நமது தமிழ் சான்றோர்கள் தனி நபர் வளர்ச்சியோடு சமூகத்தையும் இணைத்து அந்த சமூகத்தின் மையமாக கோயில்களை அமைத்தனர்.

“தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்கா தெனின்”. - தனி மனித வளர்ச்சிக்கும் ஒழுக்கத்திற்கும் வித்தாக அமைவதே தானமும் தவமும் ஆகும். தானம் என்பது பிறருக்கு உதவும் நல் குணத்தாலும் தவம் என்பது இறைவனை தொழுவதாலும் வரும் நற்பண்புகள். மழை இல்லாமல் பற்றாக்குறை ஏற்படுமாயின் மக்களால் இந்த குணங்களை வளர்க்க இயலாது. எனவே இந்த இரு குணங்களை வளர்த்து மக்கள் வாழும் பொருட்டு இறைவனை வேண்டி நிற்க தமிழ் முதுகுடிகள் ஏற்படுத்திய இடமே கோயில் ஆகும்.

**திருஅமுது:**

கால நேரங்களை கணக்கீடு செய்து, இயற்கையோடு அறிவியலையும் சமூகத்தையும் ஒன்றினைத்து, மனித உழைப்பால் வரும் விளைச்சல்களை இறைவனுக்கு பூசைகளாக நிவந்தம் செய்து அதன் மூலம் தங்களின் நன்றியை கடமையாக தமிழ் சான்றோர்கள் செலுத்தினர். பூசையினால் மட்டும் மழை வருமா என்பது இங்கே கேட்கப்பட வேண்டிய கேள்வியாக உள்ளது. விவசாயம் மட்டுமே முக்கிய தொழிலாக இருந்த அக்காலங்களில் அறமும் தவமும் மட்டுமே நாட்டை காக்கும் என்றும் அதற்கு இறை வழிபாடு தான் ஒரே வழி என்பது தான் மக்களின் நம்பிக்கை.

இதனால் கோயில்களில் பூசை முறைகளை மேற்கொள்வதோடு அறவழிகளையும் பின்பற்றினர். குண நலன்களில் சிறந்த, பதவியில் உயர்ந்த, நீதி வழுவாத, ஈடு இணை இல்லாத ஒருவர்க்கு எத்தகைய உயர் மரியாதையை கொடுக்க வேண்டுமோ அதை பல்வேறு பூசை முறைகளின் மூலமாக இறைவனுக்கு மக்கள் கொடுத்தனர். அதில் ஒன்று தான் இறைவனுக்கு படைக்கும் திருஅமுது ஆகும். இறைவனையும் மன்னனையும் குருவையும் தரிசிக்கும் பொழுது காணிக்கையின்றி வெறும் கைகளோடு செல்லக் கூடாது என்பது தமிழ் மரபு. அதன்படி தான் பூசைகளின் போது இறைவர்க்கும் அரிசியினால் செய்யப்பட்ட திருஅமுது என்னும் பல உணவு வகைகளை காணிக்கையாக செலுத்தியுள்ளனர்.

**திருஅமுதின் நோக்கம்:**

"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்

தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று." - இறைவனுக்கு திருஅமுது வழங்குவதின் மூலம் இறைவன் மழையாகிய அமுதம் மூலம் அனைத்து உயிர்களுக்கும் வாழ்வு கொடுப்பார் என்பதே மக்களின் நம்பிக்கை. ஒரு மனிதன் தனக்கு அடிப்படையாக கேட்பது உணவு, உடை, வசிக்க இடம். இந்த மூன்றையும் இறைவர்க்கு கொடுத்து அதன் மூலம் தங்கள் கடமையை செலுத்துவதே திருஅமுதின் நோக்கம் ஆகும். திருஅமுது என்பது ஒருவர் தான் நினைத்த காரியம் நடந்ததற்காக நியமமாகவோ, யாரேனும் உடல் நலம் பெறவேண்டியோ, தங்களின் குடும்ப நலனுக்காகவோ அல்லது இறைவர் மீது கொண்ட பக்தியின் காரணமாகவோ திருஅமுது படைக்க தங்களால் இயன்ற தானங்களை கோயில்களுக்கு வழங்கியுள்ளனர். காரணங்கள் வேறாக இருப்பினும் அவர்களின் நோக்கம் இறைவர்க்கு திருஅமுது படைக்க வேண்டும் என்பதே ஆகும்.

**திருஅமுதின் வகைகள்:**

கோயில்களில் பூசை என்பது திருஅமுது படைப்பது மட்டுமல்ல. பூசையின் வழி முறையில் அதுவும் ஒன்று. அதையும் அறிந்து கொள்வது இங்கே அவசியமாகின்றது. காரணம் திருஅமுது படிக்கு தன்மம் வழங்கும் தானத்தார்கள் திருமஞ்சனம், திருஎண்ணைக் காப்பு, திருஅமுது, திருவிளக்கு, மேற்பூச்சு, திருபரிச்சட்டம் உள்ளிட்டவைகளுக்கும் சேர்த்தே தானம் வழங்கியுள்ளனர். பூசையின் தொடக்கமாக அதிகாலையில் இறைவர்க்கு ஆறு அல்லது கிணறுகளில் இருந்து குடத்தில் நீர் கொண்டு வந்து அபிஷேகம் செய்வர். இதற்கு திருமஞ்சனம் என்று பெயர். பிறகு திருஎண்ணைக் காப்பு நடைபெறும். தொடர்ச்சியாக திருமேனியில் சந்தனம் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் பூசப்பட்டு திருப்பாவாடை சாற்றுதல், திருபரிச்சட்டம், திருவிளக்குகள், திருப்பள்ளித்தாமம் என்னும் மலர் மாலைகள் சாற்றப்பட்டு ஓதுவார்கள் திருமுறைகள் ஓத, உவச்சர்கள் வாத்தியங்கள் இசைக்க, பல்வேறு வகைகளான திருஅமுதும், தாம்பூலமும் இறைவர்க்கு படைக்கப்படும். அதன்படி கைக்குத்தல், செம்மஅரிசி போன்ற அரிசியினால் சமைக்கப்பட்ட திருஅமுதும், காய்கறிகளால் ஆக்கப்பட்ட கறியமுது, புளிக்கறி, பொரிக்கறி, புழுக்குக்கறி, பருப்பமுது, நெய்யமுது, மிளகமுது, தயிரமுது, இவைகளுக்கு தேவைப்படும் அளவு உப்பமுது, அடைக்காய் (பாக்கு), இலையமுது (வெற்றிலை) என பல வகைகளான அமுதுகள் இறைவனின் நிவந்தங்களில் இடம் பெற்றுள்ளன. தானத்தர்கள் இந்த திருஅமுது என்ற பெயரில் பூசைக்கான கலசங்கள், நூல், ஆடைகள், வாசனை திரவியங்கள், நெல், அரிசி, பருப்பு, காய்கறிகள், நெய், எண்ணெய், விறகு, சர்க்கரை, உப்பு,

அடுமனைகள், மண்கலங்கள் என திருஅமுது படைக்க தேவைப்படும் இதர பொருட்கள் அனைத்தையும் தானமாக வழங்கியுள்ளனர்.

**திருஅமுதின் பூசை முறைகள்:**

கோயில்களில் ஆறு கால நிசத பூஜைகள் நடைபெறும். இதில் உசத்கால பூசை சூரிய உதயத்துக்கு முன்பும், காலசந்தி பூசை சூரிய உதயத்துக்கு பின்பும், உச்சிகால பூசை நண்பகலிலும், சாயரட்சை பூசை சூரிய மறைவிற்கு முன்பும், இரண்டாம் கால பூசை சூரிய மறைவிற்கு பின்பும், அன்றைய நாளின் கடைசியாக அர்த்தசாம பூசையும் நடைபெறும். பொதுவாக ஆகம முறைப்படியோ அல்லது கோயில் சபையினரின் வழிகாட்டுதல் பெயரிலோ மேற்கூறிய பூசைகள் கோயில்களில் நடைபெற்று வந்திருக்கலாம். ஆயினும் தானம் வழங்குபவர்கள் அவர்கள் வேண்டும் பூசைக்கு, அவர்கள் பெயரில், அவர்கள் கொடுக்கும் தானங்களை வைத்து திருஅமுது உள்ளிட்ட பூசைகள் நடைபெற்றன. பெரும்பாலும் கால சந்தி பூசைகளுக்கே அதிகமான அளவில் தானங்கள் கொடுக்கப்பட்டுள்ளதை கல்வெட்டுகள் மூலமாக அறிய முடிகின்றது. திருஅமுது உள்ளிட்ட நிசத பூசைகள் முறையாக நடைபெறுகிறதா என்பதை ஊர் சபையும் கோயில் தானத்தார்களும் கண்காணித்து வந்தனர்.

**திருஅமுதுக்கான தன்ம (தானம்) வகைகள்:**

தானத்தில் சிறந்ததாக கருதப்படுவது அன்னதானம். அந்த அன்னத்தை இறைவர்க்கு கொடுப்பதும் அதற்காக தானம் வழங்குவதும் இறைவனின் திருவருள் பரிபூரணமாக கிடைப்பதற்கான வழி என்று நமது முன்னோர்கள் கருதினர். இதனால் சைவ வைணவ பாகுபாடு இல்லாமல் திருவமுது வழங்க தானங்களை இறைவர்க்கு கொடுத்துள்ளனர். தானங்களை வழங்குவதற்கு எந்தவித கட்டுபாடுகளும் இல்லை என்றாலும் அன்றைய நிதி நிலைமையின் காரணமாக திருஅமுது போன்ற பெரிய அளவிலான தானங்களை வழங்குவது என்பது பொருளாதார வசதி கொண்டவர்களால் மட்டுமே செய்ய முடிந்தது. இருப்பினும் தங்களின் வசதிகளுக்கு ஏற்ப மக்கள் தங்களால் இயன்ற ஏதேனும் ஒரு தானங்களை கோயில்களுக்கு கொடுத்துக் கொண்டே இருந்துள்ளனர். திருஅமுது தானத்தை பொறுத்தவரையில் அரசரோ, அரசரின் குடும்பத்தார்களோ, அரசரின் பெயரில் அதிகாரிகளோ, மகாசபையினரோ அல்லது தனி நபர்களோ இறைவர்க்கு தானங்களை வழங்கியுள்ளனர். அதற்காக தங்களின் சொந்த நிலங்களையோ, அல்லது வேறு நிலங்களை விலைக்கு வாங்கி அந்த நிலங்களையோ, அல்லது பொன்னாகவோ அல்லது நெல்லாகவோ கோயில் நிர்வாகத்திடம் கொடுத்தனர். அவ்வாறு கொடுக்கும் போது ஊர் சபையில் போதிய காசு செலுத்தி அந்த நிலத்திற்கு வரி நீக்கமும் பெற்றுக் கொடுத்துள்ளனர். சில சமயங்களில் அந்த நிலத்தில் இருந்து வரும் வருவாயில் வரி செலுத்தவும் வழிவகை செய்துள்ளனர். ஊரவையின் முன்னிலையில் கோயில் தானத்தாரிடம் அந்த நிலங்களின் எல்லைகள், அளவுகள், கொடுப்பவரின் தகவல்கள், தானம் பெறும் கோயில் மற்றும் இறைவன் திருநாமம், செய்ய வேண்டிய பூசைகள், பூசைக்கு வழங்க வேண்டிய பொருட்கள் மற்றும் அந்த பொருட்களின் அளவுகள் என அனைத்தும் தெரிவிக்கப்பட்டு தானமானது கோயில் அதிகாரிகளிடம் நீர் வார்த்து ஒப்படைக்கப்படும். அதனை பெற்றுக் கொண்ட கோயில் அதிகாரிகள் அந்த நிலங்களின் வருவாய்களை கோயிலின் ஸ்ரீபண்டாரத்திடம் (கோயில் கருவூலம்) ஒப்படைத்து விடுவர். ஸ்ரீபண்டாரத்தார் (கருவூல அதிகாரிகள்) அந்த வருவாயை கொண்டு திருஅமுது படைக்க தேவையான பொருட்களை சரியான

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/tirjts05sp052026

அளவில் வாங்கிக் கொடுத்து பூசை நடக்க ஏற்பாடு செய்வார்கள். பெரும்பாலும் திருஅமுதுக்காக நிலங்களே தானமாக வழங்கப்படுவதால் அந்த நிலத்தில் இருந்து பெறப்படும் நெல்லை உடலாகக் (முதலீடாக) கொண்டு நிசத பூசைகளுக்கு தேவையான பொருட்களை ஸ்ரீபண்டாரத்தார் வாங்கி கொடுப்பார்கள். நிலம், நெல், பொன் என எந்த வடிவில் தானம் வழங்கப்பட்டாலும் அதை முதலீடாகக் கொண்டு அதன் பொலிசையாக (வட்டி) வரும் நெல்லை கொண்டே இறைவர்க்கு திருஅமுது நிவந்தம் நடைபெற்றுள்ளது.

**திருஅமுதின் அளவுகள்:**

கோயில் பூசைகளில் மிக முக்கிய இடத்தைப் பெற்றிருக்கும் திருஅமுது நிவந்தத்தின் போது நெல்லை பிற பொருட்களாக மாற்றும் பண்டமாற்று முறையும் இங்கே செயல்பட்டுள்ளது என்பதை நம்மால் அறிய முடிகின்றது. தானம் கொடுப்பவர்களின் வேண்டுதலின் படி திருஅமுது எவ்வளவு படைக்க வேண்டுமோ அதற்கு தேவையான பொருட்களை நெல்லைக் கொடுத்து வாங்கியுள்ளனர். உதாரணமாக அரிசிக்கான நெல் நாநாழி (நான்கு நாழி), ஒரு உரி நெய்க்கான நெல், ஒரு ஆழாக்கு விளக்கு எண்ணைக்கான நெல், ஒரு பதக்கு பருப்புக்கான நெல், ஒரு உரி தயிருக்கான நெல், புளிக்கறி, புளுக்குக்கறி, பொரிக்கறி போன்றவற்றிக்கான நெல், அடைக்காய் அமுதுக்கான நெல், இலை அமுதுக்கான நெல், சந்தனத்திற்கான நெல், ஆடைகளுக்கான நெல், திருமஞ்சன கலசத்திற்கான நெல், திருபரிசட்டத்திற்கான நெல் என ஒவ்வொரு பொருளுக்கும் வேறுபட்ட அளவுடைய நெல்லை கொடுத்து அந்த பொருட்களை வாங்கி திருஅமுது படைத்துள்ளனர். ஒவ்வொரு பொருள்களுக்கும் தனியான நாழி, உரி, குறுணி, பிடி, உழக்கு, கலம், தூணி என்ற அளவு முறைகள் பெற்றுள்ளது இங்கே முக்கிய இடம் பெற்றுள்ளன.

**திருஅமுதும் கல்வெட்டுச் சான்றுகளும்:**

இந்தியாவிலேய அதிக கல்வெட்டுகள் நமது தமிழ்நாட்டில் தான் உள்ளது. கோயில்களின் எண்ணிக்கையும் இங்கு அதிகம். திருஅமுது பற்றிய கல்வெட்டுகள் பெரும்பாலும் அனைத்துக் கோயில்களிலும் இருக்கின்றன என்றாலும், எடுத்து இயம்ப முடியாத காரணத்தால் ஒரு சில கோயில்களை முன்னெடுத்து அவற்றில் உள்ள திருஅமுது பற்றிய சான்றுகள் இங்கே விளக்கப்பட்டுள்ளன.

**மத்தபுரீஸ்வரர் திருக்கோயில்:**

சோழ மன்னன் உத்தம சோழன் காலத்தில் சிறுவேலூருடையன் திருநந்தி இராயனடி என்பவர் தஞ்சாவூர் மாவட்டம் தேவாராயன் பேட்டை மத்தபுரீஸ்வரர் கோயிலின் இறைவர்க்கு நாநாழி அரிசியும், நெய்யமுதும், தயிரமுதும், கறியமுதும், அடைக்காயமுதும் இலையமுதும் உள்ளிட்ட திருஅமுது படைக்கவும், ஆற்றில் இருந்து நீர் எடுத்து திருமஞ்சனம் செய்யவும் நில தானம் வழங்கியுள்ளார்.

முதலாம் பராந்தகன் காலத்தில் திருச்சேலூர் மத்யஸ்தன் நக்கன் அமுதன் என்பவர் மத்தபுரீஸ்வரர் கோயில் ரிஷப வாகன பெருமாளுக்கு நண்பகல் பொழுதில் திருஅமுது படைக்க நான்கு நாழி அரிசி, நெய்யமுது, கறியமுது, தயிரமுது, அடைகாயமுது, திருமஞ்சனம் நீர் எடுக்க குடம் என அனைத்து தேவைகளுக்கும் விலை கொடுத்து நிலம் வாங்கி கொடையாகக் கொடுத்துள்ளார்.

சோழ மன்னன் உத்தமசோழன் காலத்தில் மத்தபுரீஸ்வரர் கோயிலில் சிறுவேலூருடையான் திருவடிகள் ஐயனடிகள் திருச்சேலூர் இறைவர்க்கு சிறுகாலை திருஅமுதுக்காக நான்கு நாழி அரிசியும், உச்சிப் பொழுதில் நான்கு நாழி அரிசியும், நெய்யமுதும், தயிரமுதும், அடைகாயமுதும், திருநொந்தா விளக்கு எரிக்க தினசரி ஒரு உரி எண்ணையும் வழங்கும் பொருட்டு நிலங்களை கொடையாக வழங்கியுள்ளார்.

முதலாம் குலோத்துங்கன் காலத்தில் குலோத்துங்க சோழ மூவரையன் என்பவர் ஸ்ரீராசகேசரி சதுர்வேதி மங்கலத்து திருச்சேலூர் மகாதேவர்க்கு அமுது படைக்க அரை வேலி ஒரு மா நிலத்தை 12 காசுகளுக்கு விலைக்கு வாங்கிக் கொடுத்துள்ளார்.

மேற்கூறிய அதே நபர் திருச்சேலூர் மகாதேவர்க்கு அமுதுபடிக்காக ஆறு மா நிலத்தை விலைக்கு வாங்கி, அதோடு பழம்படி நிலம் மூன்று மாவையும் சேர்த்து கோயிலுக்கு கொடுத்துள்ளார். ஒவ்வொரு விளைச்சலின் போதும் அரை காசு அந்தராயமாக வரி செலுத்த ஏழு அரை மா பொன்னை ஊரின் மகாசபையாரிடம் வைப்புத் தொகையாக வழங்கியுள்ளார்.

**இராமலிங்கேஸ்வர சுவாமி திருக்கோயில்:**

தஞ்சை மாவட்டம் பாபநாசம் வட்டத்தில் உள்ள 108 சிவாலய கோயிலில், சோழர்களின் ஆட்சி காலத்தில் ஊரின் நகரத்தார்கள் ஒன்று கூடி நங்கீச்வரம் உடையார் கோயிலில் நாச்சியார்க்கு திருஅமுது படைப்பதற்காக அன்றாடு என்னும் ஐந்து காசுகள் கொண்டு நிலம் வாங்கிக் கொடுத்துள்ளனர்.

**பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில்:**

தஞ்சை மாவட்டம் பாபநாசம் வட்டம் புள்ளமங்கை ஊரில் முதலாம் பராந்தகன் ஆட்சியில் திருவாலந்துறை மகாதேவர் கோயிலில் தினமும் சிறுகாலைச் சந்தியின் போது இரண்டு நாழி அரிசியும் அரை படி நெய்யும் கொண்டு திருஅமுது படைக்க செம்பிய மகாவலி வாணராயண் என்பவர் ஸ்ரீகண்டமங்கலத்தில் நிலம் விலைக்கு வாங்கி “சந்திப் புறம்” என்ற பெயரில் தானமாகக் கொடுத்துள்ளார்.

**சக்கரேஸ்வரர் திருக்கோயில்:**

தஞ்சை மாவட்டம் பாபநாசம் வட்டம், சக்கரப்பள்ளி ஊரில் உள்ள சக்கரேஸ்வரர் கோயிலில் முதலாம் ராசராசனின் காலத்தில் இவ்வூரை சேர்ந்த செம்பியன் பொய்கை நாட்டு கிழவன் எழுப்பித்த சூர்ய தேவர்க்காக கிழார் கூற்றத்து அகழிமங்கை சபையார் அமுதுபடி, கறியமுது, உள்ளிட்டவைகளுக்காக நிலம் வழங்கி அதற்கு இறை நீக்கமும் செய்து இறையிலி நிலமாக கொடையாக வழங்கியுள்ளனர்.

முதலாம் ராஜேந்திர சோழன் ஆட்சியில் அகழிமங்கலத்து சபையார் சக்கரேஸ்வரர் கோயிலுக்கு இறையிலி நிலம் கொடுத்துள்ளனர். அதைப் பெற்றுக்கொண்ட கோயில் தானத்தார்கள் (நிர்வாகத்தார்கள்) அந்நிலத்தை வேறு ஒருவருக்கு கொடுத்து அதன் மூலம் வரும் வருவாயில் இறைவர்க்கு அரிசியமுது, கறியமுது, புழுக்குக்கறி, மிளகு, நெய், குசக்கலம் போன்றவற்றை வழங்கி திருஅமுது படைக்க ஏற்பாடு செய்தனர்.

**முல்லைவனநாத சுவாமி திருக்கோயில்:**

தஞ்சை மாவட்டம் திருகருகாவூர் ஊரில் உள்ள முல்லைவனநாத சுவாமி கோயிலில் உத்தமசோழன் காலத்தில் கொம்பைபாக்கமுடையான் சிங்கள கலியனான உத்தமசோழ மூவேந்த

வேளான் வேண்டுதலின் பெயரில் மன்னர் மூன்று வேலி நிலங்களை திருவலஞ்சுழி கோயிலில் ஐப்பசி மாதம் பிறக்கும் நாள் அன்று அதிகாலையில் பூசை செய்யும் பொருட்டு மூன்று வேலி நிலம் வழங்கி அதன் மூலம் பொலிசையாக வரும் 710 நெல்லைக் கொண்டு முல்லைவனநாத சுவாமிக்கு திருஅமுதுபடி, திருவிளக்குகள், மேற்பூச சந்தனம், குங்கிலியம், பணி செய்பவர்களுக்கான ஊதியம் மற்றும் ஆடைகள் வழங்கவும், கருமாணிக்கத்தேவர் என்னும் திருமாலுக்கும் அமுதுபடி, விளக்குகளும் அதுபோக விநாயகருக்கும் திருஅமுது வழங்கவும் கோயில் மற்றும் ஊர் அதிகாரிகளின் முன்னிலையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

**விஸ்வநாத சுவாமி திருக்கோயில்:**

திருவைகாவூர் ஊரில் உள்ள விஸ்வநாத சுவாமி கோயிலில் இரண்டாம் இராசராசனின் ஆட்சி காலத்தில் அணுக்கியார் அனங்க பதாகையார் மகள் உடையநாச்சி என்பவர் தாம் எழுப்பிய நித்த விநோத கல்யாண சுந்தர தேவர்க்கும் நாச்சியார்க்கும் திருப்பணிக்காக 200 காசுகளை திருவைகாவுடையார் கோயில் தானத்தார்கள் வசம் கொடுத்து அதன் மூலம் வரும் மாத பொலிசை ஆறு அரை காசினைக் கொண்டு கோயில் ஸ்ரீபண்டாரத்தார்கள் நாள்தோறும் அரிசியமுது, கறியமுது, அடைக்காயமுது, இலையமுது படைக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

**கல்யாண சுந்தரேஸ்வரர் திருக்கோயில்:**

சோழ மன்னன் இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் பாபநாசம் வட்டம் நல்லூர் கல்யாண சுந்தரேஸ்வரர் கோயில் கல்வெட்டில் சேர்ந்தபிரான் என்பவர் நல்லூர் இறைவர்க்கும் நாச்சியார்க்கும் இரவு சந்தி, அர்த்தசாமம் உள்ளிட்ட திருஅமுது படைக்கவும் (அரிசியமுது, கறியமுது, பருப்பு உள்ளிட்ட வெஞ்சினங்கள்) ஸ்ரீபலி கொடுக்கவும், நாச்சியார்க்கு சிறுகாலை சந்தி, உச்சிகால சந்தி, இரவு சந்தி என அனைத்திற்கும் சேர்த்து நிலத்தை தானமாக வழங்கியுள்ளார்.

மயிலாப்பூர் உடையான் ஆளுடைய திருசத்திமுற்றமுடையன் என்பவன் நல்லூர் கோயிலின் நட்டம் பயின்றாடும் நாயனாருக்கு (நடராஜர்) அர்த்தசாம பூசையில் திருஅமுது படைக்க நிலத்தை நீர்வார்த்துக் கொடையாக கொடுத்துள்ளார்.

நல்லூர் இறைவர்க்கு உச்சி வேளையில் நடக்கும் பூசையில் இரு நாழி அரிசியும், கறியமுதும், வெஞ்சனமும், விறகும், ஒடுக்கு சட்டியும் திருஅமுதாக படைத்து, அதை ஸ்ரீமாஹேஸ்வரர்களுக்கு கொடுக்க வேண்டும் எனவும் அதற்காக கால் காணி நிலத்தை பளிங்குடையார் ஆண்டர் திருப்பரமனார் என்பவர் தானமாக வழங்கியுள்ளார். மேலும் இந்த நிலத்துக்கு ஒப்பான பிராமண விலையாக 4150 காசுகளை கோயில் ஸ்ரீபண்டாரத்தில் கொடுத்து அதில் வரும் வருவாய் கொண்டும் இந்த திருஅமுது படைக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

மூன்றாம் இராசராசனின் காலத்தில் நல்லூர் கோயிலில் பணிபுரியும் பலரும் வேண்டிக் கொண்டதன் பேரில் சைவதிகார பிரமமாயரும், ஸ்ரீமாகேஸ்வர கண்காணி, தேவகண்மி, மாதான மங்கலமுடையாரும் சேர்ந்து ஒரு நிலத்தினை சண்டேஸ்வர பெரு விலையாக விற்று அந்த வருவாயில் திருவகம்படிப் பிள்ளையாரை எழுந்தருளச் செய்து அவருக்கு திருஅமுது படைக்கவும் ஏற்பாடுகளை செய்தனர்.

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/tirjts05sp052026 

மூன்றாம் இராசராசசோழனின் ஆட்சி காலத்தில் கல்யாண சுந்தரேஸ்வரருக்கு திருஅமுதுப்படி, சாத்துப்படி, திருமேற்ப்பூச்சு, வெஞ்சனங்கள், விளக்கு எண்ணெய் போன்ற செலவுகளுக்காக நிலம் வழங்கி அதன் மூலம் வரும் நெல்லை ஸ்ரீபண்டாரத்தில் செலுத்தி மேற்படி பூசைகளை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. கல்வெட்டு சிதைவினால் நிலம் வழங்கியவர் யார் என தெரியவில்லை.

**வெங்கடாசலபதி திருக்கோயில்:**

விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் வட்டம் சோழபுரத்தில் பாண்டியரின் கோனேரின்மை கொண்டான் காலத்தில் ஆன்மர் நாட்டு உத்தமசோழ விண்ணகர் ஆழ்வார் கோயிலின் வைஷ்ணவர்களுக்காக பெரிய ஜீயரும் இளைய ஜீயரும் வழங்கிய நிலங்களில் இருந்து வரும் அந்தராயம் உள்ளிட்ட அனைத்து வரிகளையும் கொண்டு பிராட்டியார் எழுந்தருளும் போது திருப்படிமாற்று, திருஅமுது உள்ளிட்டவைகள் செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

பாண்டிய மன்னன் குலசேகரன் ஆட்சியில் ஆன்மர் நாட்டு உத்தமசோழ விண்ணகர் ஆழ்வார் கோயிலில் மன்னார் மற்றும் நாச்சியார் திருமேனிகளுக்கு அமுதுபடி, சாத்துப்படி உள்ளிட்ட நிவந்தங்களுக்காக ஒரு வேலி நிலம் கொடுத்து அதன் வருவாயில் சித்திரை மாதம் முதல் பூசைகள் தொடர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**விக்கிரம பாண்டீஸ்வரமுடையார் திருக்கோயில்**:

இராஜபாளையம் வட்டம் சோழபுரத்து விக்கிரம பாண்டீஸ்வரமுடையார் கோயிலில் பாண்டிய மன்னனின் பெயரால் அவனி வேந்தராமன் சந்தி ஏற்படுத்தப்பட்டு அதற்கு தேவையான அமுதுபடி சாத்துப்படி வெஞ்சனம் உள்ளிட்டவைகளுக்காக குறிப்பிட்ட எல்லைகளுக்கு உட்பட்ட நிலங்களில் இருந்து வரும் வருமானங்களை மூலமாகக் கொண்டு சித்திரை மாதம் முதல் பூசை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**நச்சாடை தவிர்த்தருளிய நாயனார் திருக்கோயில்:**

ராஜபாளையம் வட்டம் தேவதானம் கோயிலில் தென்காசிப் பாண்டியர்களில் பராக்கிரம பாண்டியன் தேவதானத்திற்கு எழுந்தருளிய போது இட்ட ஆணைப்படி இறைவனின் காலசந்தி பூசைக்கு தேவையான அமுதுபடி, சாத்துப்படி, கறியமுது, நெய்யமுது போன்றவைகளுக்காக ஆரி நாட்டில் நிலம் வழங்கியுள்ளார்.

**விக்கிரம பாண்டீஸ்வரமுடையார் திருக்கோயில்:**

விருதுநகர் மாவட்டம் சிவகாசி வட்டம் வெம்பைக்குடி உடையார் விக்கிரம பாண்டீஸ்வரமுடையார் கோயிலில் பாண்டிய மன்னன் சுந்தரபாண்டியன் காலத்தில் நாயனாருக்கு அமுதுபடி மற்றும் சாத்துப்படிகளுக்காக வெம்பைக்குடி தானத்தார் விலை கொடுத்து வாங்கிய அரை வேலி நிலத்தை தானமாக கொடுத்துள்ளனர்.

**நின்ற நாராயணப் பெருமாள் திருக்கோயில்:**

விருதுநகர் மாவட்டம் திருத்தங்கல் ஊரில் பாண்டிய மன்னன் குலசேகரன் ஆட்சிக் காலத்தில் நரசிங்கப் பெருமாளுக்கு அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட நிவந்தங்களுக்காக கோபவானும், குன்றெடுத்த திருவரங்க தேவனும் எட்டு காணியும் முந்திரிகை கீழ் முக்காலே அரைக்காலும் அளவுடைய நிலத்தை தானமாகக் கொடுத்துள்ளனர்.

பாண்டிய மன்னன் சடையவர்மன் குலசேகரன் காலத்தில் நின்ற நாராயணப் பெருமாள் கோயிலில் சோறன் உய்ய நின்றடுவான் குருகுலத் தரையன் தன்னுடைய பெயரில் ஏற்படுத்திய

பூசைக்கான நாலு நாழி பிரசாதம், இரண்டு திருத்தாம்பூலம் ஒரு தளிகை உள்ளிட்ட அமுதுபடி, சாத்துபடி போன்ற சிலவினங்களுக்காக ஐந்து மா நிலத்தை தானமாக வழங்கியுள்ளார்.

**சிவலோகமுடைய நாயனார் திருக்கோயில்**:

மூன்றாம் இராசராசனின் ஆட்சிக் காலத்தில் நன்னிலம் வட்டம் திருவீழிமிழலை நாதர் கோயில் கல்வெட்டின் படி இக்கோவிலின் தேவதான ஊராகிய ஜெயங்கொண்ட சோழ நல்லூரில் உள்ள சிவலோகமுடைய நாயனார் கோயிலில் உச்சி சந்தி பூசைக்கு திருஅமுது இல்லாமல் இருந்ததால் அக்கோவில் பிராமணர்கள் நான்கு பேர் அக்கோவிலில் திருப்பணி செய்திருக்கும் தபசி குளமங்கல முடையன் என்பவரிடம் கேட்டுக் கொண்டதன் பேரில் அவர் பல பேரிடம் இருந்து 30 காசுகளை திரட்டி அதன் மூலம் திருஅமுது செய்ய வழிவகுத்தார். தன்னிடம் இல்லாத போதும் பிறரிடம் இரந்தாவது இறை பணி செய்துள்ளனர் நம் முன்னோர்கள்.

**திருவீழிமிழலை நாதர் திருக்கோயில்**:

நன்னிலம் வட்டம் திருவீழிமிழலை நாதர் கோயிலில் மூன்றாம் இராஜேந்திர சோழன் காலத்தில் பாம்பூர் நாட்டு ஆதிச்சனான செம்பியன் திருவீழிமிழலை சபையாரிடம் 1500 கலம் நெல் கொடுத்து அதன் வட்டியால் திருவீழிமிழலை நாதருக்கு மூன்று சந்தி திருஅமுதும் ஆதிச்சன் பிறந்த நாளான புரட்டாசி ரேவதி திருநாளில் வழிபாடும், திருவிழாவும் மேற்கொள்ள பணித்துள்ளான். இதன்படி மூன்று சந்தியிலும் நான்கு நாழி அரிசியமுதும், கறியமுதும், பொரிக் கறியமுதும், உழக்கு நெய் அமுதும், தயிரமுதும் வழங்கும் பொருட்டு தினமும் ஐந்து நாழி நெல் கொடுக்க வேண்டும்.

மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சியில், திருவீழிமிழலை நாதர் கோவில் நாச்சியாருக்கு திருஅமுதுபடிக்காக இவ்வூர் பெருங்குறி மகாசபையார் நான்கு மா நிலத்தை இறை நீக்கி கொடுத்துள்ளனர்.

சுந்தரப் பெருமாள் என்பவர் மூன்றாம் இராசராசனின் ஆட்சிக் காலத்தில் திருவீழிமிழலை நாதர் கோயிலில் மூன்றாம் பிரகாரத்தில் உள்ள மாணிக்கவாசகருக்கு திருஅமுது படைக்க 7500 காசுகள் கொடுத்து மூன்று மா நிலம் வாங்கி அதை திருநாமத்துக் காணியாக கொடுத்துள்ளார். இதன்படி நாள் ஒன்றுக்கு ஸ்ரீபண்டாரத்தில் இருந்து இரண்டு நாழி அரிசியமுதும், ஆறு பலம் கொண்ட கறியமுதும், அதற்கான உப்பு, மிளகு உள்ளிட்ட வெஞ்சனங்களும், இரண்டு அடைக்காயமுதும், நான்கு இலையமுதும் திருஅமுதுபடியாக கொடுக்க வேண்டும்.

சோழ மன்னன் விக்கிரமசோழனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் கண்ணநாந கங்கயராயன் கேட்டுக் கொண்டபடி திருவீழிமிழலை மகா சபையார் தத்தமங்கலம் என்ற நிலத்தை இறையிலி செய்து கொடுத்து அதன் வழியாக திருவீழிமிழலை உடையாருக்கு திருஅமுது செய்யவும், உச்சிசந்தி இரவுசந்தி வேளைகளில் திருமந்திரபோனகத்துக்கு அமுது படைக்கவும் ஏற்பாடுகள் நடத்துள்ளன.

முதலாம் இராஜாதிராஜ சோழன் காலத்தில் பல்லவன் பட்டாலி நங்கையார் என்பவர் தன்னுடைய பெயரில் ஏற்படுத்திய பட்டாலி ஈஸ்வரமுடைய மகாதேவர்க்கு நீராட்டு விழா எடுப்பதற்காக கைக்குத்தல் அரிசி, நெய், எண்ணெய், மஞ்சள் 48, வாசனை திரவியம் 5 பலம் (எடை அளவு), திருமஞ்சனப் புடவை 5, புடவை 1, திருவிளக்கு எண்ணெய் 1 நாழி, கறியமுது, நெய்யமுது, பருப்பு, தயிரமுது, அடைக்காயமுது 20, இலையமுது 44, 108 கலசத்திற்கு கீழ் வைக்க தேவையான

நெல் எனப் பெருந்திருவமுது படைக்க ஏற்பாடு செய்துள்ளார். இதற்காக கோயிலுக்கு 128 கழஞ்சு, 4 மஞ்சாடி குன்றிப் பொன்னைத் தானமாக கொடுத்துள்ளார். இதன் மூலம் பொலிசையாக வரும் 144 களம் நெல்லைக் கொண்டு ஒரு வேளை அபிஷேகத்துக்கு தேவைப்படும் 15 கலம் நெல் வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாம் இராஜேந்திர சோழனின் மூன்றாம் ஆட்சியாண்டில் பல்லவன் பட்டாலி நங்கையாரின் மனைவியிடம் இருந்து திருவீழிமிழலை கோயிலை சேர்ந்த 12 பிராமணர்கள் 12 அமாவாசைக்கும் 12 பௌர்ணமிக்கும் ஆக 24 தினங்களுக்கு இறைவர்க்கு அப்பமுது படைப்பதாகக் கூறி 32 காசுகளை பெற்றுக் கொண்டனர். இந்த 32 காசுகளுக்கும் பொலிசையாக வரும் 27 கலம் நெல்லைக் கொண்டு ஒரு தினத்துக்கு ஆறு நாழி அரிசியும் பருப்பும், சர்க்காரி 20 பலம், உப்பு ஒரு ஆழாக்கு, விறகு, மாவிடித்து அப்பம் சுடுவார்க்கு என 3 நாழி நெல்லும் வழங்கப்பட்டு அப்பமுது படைக்கப்பட்டது.

முதலாம் குலோத்துங்க சோழனின் 21ம் ஆட்சியாண்டில் ஊரின் நகரத்தார்கள் அனைவரும் ஒன்று கூடி இக்கோவிலில் உள்ள பெருமாள் திருமேனியை கல்யாணத் திருமேனியாக மாற்றுவதற்கும் அவருக்கு வேண்டிய திருபரிச்சட்டம், திருவிளக்கு எண்ணெய், தயிரமுது, நெய்யமுது, அடைக்காயமுது, திருமேனியில் பூசும் சந்தனங்கள் என திருவிழாவுக்கான பல கொடைகளையும் வழங்கியுள்ளனர்.

முதலாம் குலோத்துங்கசோழனின் 35ம் ஆட்சியாண்டில் திருவீழிமிழலை கோயிலின் சித்திரை திருநாள் போக மற்றும் ஒரு திருநாள் என இரண்டு திருநாள்களுக்கும் தேவைப்படும் திருஅமுது பொருட்கள் பற்றியும் அதற்காக ஆகும் செலவுகள் பற்றியும் கல்வெட்டு செய்திகள் கிடைக்கின்றது. இதன்படி அரிசியமுதும், பருப்பும், சர்க்கரை 20 பலமும், மிளகு ஒரு நாழியும், சீரகம் இரண்டு செவிடும், உப்பு குறுணி இரு நாழியும், தயிர் மூன்று குறுணியும், அடைக்காயமுது 40, இலையமுது 1400 என ஒரு நாள் திருவிழாவுக்காக 30 கலம் நெல் வழங்கப்பட்டுள்ளது. இந்த 30 கலம் நெல்லைக் கொடுத்தே தேவைப்படும் பொருட்கள் பண்டமாற்று முறையில் வாங்கப்பட்டுள்ளது.

**திருமாசிலாமணி ஈஸ்வரர் திருக்கோயில்:**

திருவள்ளூர் மாவட்டம் திருமுல்லைவாயிலில் உத்தமசோழனுடைய 14ம் ஆட்சியாண்டில் அவருடைய தாயாரால் திருமுல்லைவாயில் மாசிலாமணி ஈஸ்வரருக்கு ஆம்பூர் நாட்டு வில்லிப்பாக்கத்தில் தேவதான நிலம் விடப்பட்டது. இந்த நிலத்தின் மூலம் வரும் 1021 கலம், இரண்டு தூணி, நான்கு நாழி நெல்லைக் கொண்டு இறைவர்க்கு மூன்று வேளையும் திருஅமுது படைக்க வேண்டும் என்று நிவந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**ஞானபரமேஸ்வரர் திருக்கோயில்**:

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம் திருமெய்ஞானம் ஊரில், உத்தமச் சோழனின் 15ம் ஆட்சியாண்டில், ஒன்றுகூடிய மகாசபை பெருங்குறி பெருமக்கள், இவ்வூர் பிரம்மதேயத்தில் இடம் பெற்று இருந்த சில நபர்கள் பல காலமாக தங்கள் நிலத்திற்கு வரி செலுத்தாமல் இருந்ததால் அந்த

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/tirjts05sp052026 

வரியை சபையினரே செலுத்தி வந்தனர். இதை தவிர்க்கும் பொருட்டு சபையினர் ஞானபரமேஸ்வரர் கோயில் சந்திரசேகர பெருமாளுக்கு திருஅமுது படைப்பதற்காக அவர்களின் நிலங்களை இறையிலி செய்து திருஅமுதுபுறமாக விற்று கொடுக்க முடிவு செய்தனர்.

இராஜகேசரிவர்ம சோழனின் 7ம் ஆட்சியாண்டில் பழைய வானவன் மாதேவி சதுர்வேதிமங்கலத்து மகாசபையார் இவ்வூர் ஞானபரமேஸ்வர இறைவர்க்கு அர்த்தசாம வழிபாட்டின் போது திருஅமுது படைக்க வேண்டி இறையிலி நிலங்களை கொடையாக வழங்கியுள்ளனர்.

**நாகநாதசுவாமி திருக்கோயில்**:

தஞ்சாவூர் மாவட்டம் திருநாகேஸ்வரம் ஊரில் சோழ மன்னன் கோவிராஜகேசரிவர்மன் ஆட்சியில் ஸ்ரீவாணப்பெருந்தேவியர் என்பவர் நாகநாதசுவாமி கோயிலில் அமர சுந்தரதேவர் என்ற இறைவனை எழுப்பித்து அவருக்கு சிறுகாலையில் பூரிக்குத்தலரிசி இரண்டு நாழியும், நெய்யமுது அல்லது அரைப்பிடி கறியமுது, மிளகுப்பொடி கறியமுது ஒன்று, பொரிக்கறியமுது ஒன்று, தயிரமுது ஒன்றும், அடைக்கயாமுது இரண்டும், வெற்றிலையமுது எட்டும், சந்தியா விளக்கு இரண்டும் என இதைப் போன்றே உச்சிகாலை மற்றும் அர்த்தசாம பூசைகளுக்கும் இறைவர்க்கு கொடுக்க வேண்டும் எனவும் தானம் கொடுத்துள்ளார்.

**ஐராவதேஸ்வரர் திருக்கோயில்:**

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம் மருத்துவக்குடி ஊரில் மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஆட்சியாண்டில் திருநட்டப் பெருமாள் என்பவர் தன்னுடைய காணி நிலத்தை திருவிடைகுளமுடையார் கோயிலில் உள்ள திருவெண்காடருக்கு திருநாமத்துக் காணியாக நீர்வார்த்துக் கொடுத்துள்ளார். இதுபோக இறைவர்க்கு காவிரியில் இருந்து திருமஞ்சன நீர் கொண்டு வருதல் திருமேனியில் பூச ஏலம் மற்றும் சிதாரி, திருப்பள்ளித்தாமம், திருவமுதுக்கு வேண்டிய அரிசி, உப்பு, மிளகு, அடைக்காய், வெற்றிலை, சந்தி விளக்குகளுக்கான எண்ணெய், சனிக்கிழமை எண்ணெய் காப்புக்கு தேவையான எண்ணெய், குசவன், வண்ணான் ஆகியோருக்கு தேவைப்படும் செலவுகள் என அனைத்திற்கும் ஆக செம்பிய நெற்குப்பை என்ற ஊரில் தேவதானமாக ஒரு வேலி நிலமும் தானமாக கொடுக்கப்பட்டுள்ளது.

**திருவகத்தீஸ்வரர் திருக்கோயில்:**

விழுப்புரம் மாவட்டடம் கள்ளப்புலியூரில் மூன்றாம் குலோத்துங்க சோழனின் 3ம் ஆட்சியாண்டில் செங்கேணி வீரஅத்தியார் குலோத்துங்க சோழ சம்புவராயன் என்பவர் தாம் எழுப்பிய கூத்தாடுந்தேவர் மற்றும் பிராட்டியாருக்கு திருவீதி உலாவின் போது அமுதுபடி செய்வதற்காக ஒரு வேலி நிலம் கொடுத்துள்ளார்.

**கைலாசநாதர் திருக்கோயில்**:

பெரம்பலூர் மாவட்டம் தழுதாழை என்னும் ஊரில் உள்ள கைலாசநாதர் கோயிலில் இரண்டம் இராசாதிராசன் காலத்தில் ஆறகளூர் வேளாண் கலன்நாயகப் பெருமாள் என்பவர் செம்பை நாயகனான மகதை நாடாழ்வார் பூரண உடல் நலம் பெற வேண்டி சந்திரசேகர் நாச்சியார் கூத்தாடும் தேவர் ஆகியோர்களை எழுப்பித்து அவர்களின் திருஅமுதுக்காக 1½ மாவும், 2 ¾ வேலியும் உடைய நிலங்களை சந்திர சூரியர் உள்ளவரை செய்ய வேண்டும் என கொடுத்துள்ளார்.

**ஆடவல்லீஸ்வரர் திருக்கோயில்:**

திண்டிவனம் அருகே முன்னூரில் இரண்டாம் குலோத்துங்க சோழனின் 11ம் ஆட்சியாண்டில் இறையூரை சேர்ந்த பாலகண்ணன் காமன் என்பவர் தான் எழுப்பிய உடையப் பிள்ளையார்க்கு அமுதுபடி செய்வதற்காக 12 காசுகள் மதிப்புடைய 1½ மா நிலமும், இதோடு ஊர் சபையார் வழங்கிய 2 மா நிலமும் சேர்த்து 3 மா நிலமும் நீர் வார்த்துக் கொடுத்து அதன் மூலம் வரும் வருவாயில் ஒவ்வொரு சந்திக்கும் நான்கு நாழி அரிசியும், அதற்கு வேண்டிய கறியமுதும், நெய்யமுதும், தயிரமுதும் கொண்டு, அதுபோக அமாவாசை தோறும் ஒரு படி முக்குறுணி அரிசியும் அதற்கு தேவையான கறியமுது, நெய்யமுது, தயிரமுது கொண்டும் வழிபட ஏற்பாடு செய்துள்ளார்.

**திருகோட்டீஸ்வரமுடையார் திருக்கோயில்**:

செஞ்சி வட்டம் பெருவளூரில் இரண்டாம் குலோத்துங்க சோழனின் 13ம் ஆட்சியாண்டில் சோழச் சம்புக ராஜனேன் என்பவர் திருகோட்டீஸ்வரமுடையார் பூசைக்கும் திருஅமுது செய்வதற்கும் 24 வேலி நிலம் இறைவர்க்கு தேவதானமாகக் கொடுத்துள்ளார்.

**திருக்காமீஸ்வரமுடையார் திருக்கோயில்:**

சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் ஆறகளூர் திருக்காமீஸ்வரமுடையார் கோயிலில் பாண்டிய மன்னன் சுந்தர பாண்டியனின் 8ம் ஆட்சியாண்டில் மன்னனின் அண்ணன் (அண்ணாழ்வி) பெயரால் கண்டியத் தேவர் என்பவர் எழுப்பிய குலசேகர ஆவுடையாருக்கு நிசத அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட நிவந்தங்களுக்காக 3000 குழி நன்செய் நிலத்தை கோயில் தானத்தார்களுக்கு கொடையாக கொடுத்துள்ளார்.

மேற்கூறிய அதே கோயிலில் மூன்றாம் குலோத்துங்கன் 29ம் ஆட்சி காலத்தில் சிறுத்தொண்டன் என்பவர் மூவர் பெருமக்களை எழுந்தருளச் செய்தும் அவர்களுக்கு பூசைகள் தோறும் திருஅமுது படைக்க 5000 அன்றாடு நற்காசுகளை கோயிலின் மாஹேஷ்வரர்கள், தேவகண்மிகள், கோயில் கணக்கன் ஆகியோர் முன்னிலையில் ஸ்ரீபண்டாரத்திலே கொடுத்து அதன் மூலம் திருமஞ்சன நீர் கொண்டு வரவும், அந்தி சந்தியில் இரண்டு விளக்கு எரிக்கவும் திருபரிச்சட்டம், திருப்பள்ளித்தாமம், திருஅமுதுவுக்கு என நான்கு நாழி அரிசி, 40 பலம் (எடை அளவு) கொண்ட கறியமுது, அதற்கு ஏற்ற உப்பு, மிளகு, நெய்யமுது கொண்டும் பூசை செய்ய ஏற்பாடு செய்துள்ளார்.

திருக்காமீஸ்வரமுடையார் கோயிலில் உள்ள கி.பி.13ம் நூற்றாண்டு கல்வெட்டில் பெயர் அறிய இயலாத மன்னனின் அரசாணைப்படி, இறைவர் உலகமுழுதுடையார்க்கு அமுதுபடி, சாத்துப்படி நிவந்தங்களுக்காக கோயில் தானத்தார்கள் கொடுத்த முதலீடு போக மன்னனின் பற்றில் உள்ள 8500 குழி நிலங்களை திருநாமத்துக் காணியாகக் கொண்டு, அந்த நிலங்களை குடிமக்களிடம் பயிர் செய்ய விட்டு அதன் மூலம் வரும் வருவாயில் பாதியை பூசைக்கு கொடுக்க வேண்டும்.

மூன்றாம் இராசராசனின் 14ம் ஆட்சி ஆண்டில் திருக்காமீஸ்வரம் உடையார் கோயிலில் தொண்டைமான் தங்கை நாச்சியார் எழுப்பிய காரியான ஈஸ்வரமுடைய நாயனாருக்கு நாள் தோறும் திருமஞ்சன கலத்துக்கும், திருப்பள்ளித்தாமம், திருபரிச்சட்டம், சந்தி விளக்குகள் 5, சனி எண்ணைக் காப்பு என திருப்படிமாற்றுக்காக 3000 அன்றாடு நற்காசுகளை கொடுத்துள்ளார். இதுபோக

திருஅமுது, வெஞ்சனங்கள், சிறப்பு பூசைகளுக்கு என 12000 அன்றாடு நற்காசுகளையும் ஸ்ரீபண்டாரத்தில் கொடுத்துள்ளார். திருஅமுதுக்காக ஆறு நாழி அரிசி, ஆறு பலம் கறியமுது, அதற்கு தேவையான உப்பமுது, மிளகமுது, நெய்யமுது மற்றும் அடைக்காயமுதும் கொடுக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

**கரிவரதராசப் பெருமாள் திருக்கோயில்:**

சேலம் மாவட்டம் ஆறகளூர் கரிவரதராசப் பெருமாள் கோயிலில் சுந்தர பாண்டியனின் 13ம் ஆட்சியாண்டில் அரசனின் ஆணைப்படி, அரசனின் அண்ணணுக்கு கிரகசாந்தி செய்யும் பொருட்டு இறைவர் சிங்கப்பெருமாளுக்கு அமுதுபடி, சாத்துப்படி உள்ளிட்டவைகளுக்காக முதல் தரமான 1000 குழி நன்செய் நிலங்கள் வழங்கப்பட்டு, அதில் வரும் அனைத்து வரிகளும் இறையிலி திருநாமத்துக் காணியாக வழங்கப்பட்டுள்ளது.

**பிராநீஸ்வரமுடையார் திருக்கோயில்**:

சேலம் மாவட்டம் பெரியசோரகை சிவன் கோயில் கல்வெட்டின் படி போசள அரசன் வீரராமநாதன் 17வது ஆட்சியாண்டில் ஆந்தை இளமன் முதலி என்பவர் பிராநீஸ்வரமுடையாரை கற்றுளி திருமேனியாக செய்வித்தார். இவருக்கு அமுதுபடி, சாத்துப்படி ஆகிய நிவந்தங்களுக்காக இவ்வூரின் முதலிகள் திருநாமத்துக் காணியாக 150 குழி நிலமும், நன்செய் நிலமாக 200 குழியும், அதுபோக புன்செய் நிலமும் கொடுத்துள்ளனர்.

சேலம் சுகவனேஸ்வரர் கோயிலில் சோழ மன்னன் கோவிராசகேசரியின் 5ம் ஆட்சியாண்டு கல்வெட்டில் மாசித் திருவிழாவுக்காகவும், பிராமணர்கள் 25 நபருக்கு மூன்று கறி, அரைப் பிடி நெய், தயிர், வெற்றிலை என அமுது வழங்கவும் 40 கழஞ்சு பொன் வழங்கப்பட்டுள்ளது. கோயிலில் இறைவர்க்கு மட்டும் இல்லாது இறை பணியில் ஈடுபடும் அனைவருக்கும் அமுது கொடுப்பது தமிழ் சமூகத்தின் உயரிய மாண்பினை காட்டுகின்றது.

**கச்சபேஸ்வரர் திருக்கோயில்:**

செங்கல்பட்டு மாவட்டம் திருக்கச்சூர் கச்சபேஸ்வரர் கோயிலில் மூன்றாம் குலோத்துங்க சோழனின் 10வது ஆட்சி காலத்தில் பயிர் விளைச்சல் இல்லாமல் போனது. இதனால் திருக்கச்சூரான நித்தவிநோத நல்லூர் ஊரவர்கள், ஆயலூர் ஊர்த்தலைவன் குப்பை சோறுடையன் என்பரிடம் 15 காசுகள் பெற்றுக்கொண்டு நிலத்தை விற்பனை செய்துள்ளனர். இந்த காசினைக் கொண்டு திருக்கச்சூர் நாயனார்க்கு குறுணி அரிசி அமுதும், கறியமுது நான்கும், நெய்யமுதும், தயிரமுதும், அடைக்காயமுதும், 11 சந்தி விளக்கும் கொண்டு பூசை செய்தனர். பஞ்ச காலங்களிலும் இறைவர்க்கு பூசை நிறுத்தாமல் திருஅமுது செய்து வழங்கும் நமது முன்னோர்களின் செயல் கோயிலின் மீது அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் மதிப்பும் ஈடு இணை இல்லாத ஒன்று.

**நத்தமேடு சிவன் கோயில்**:

கரூர் மாவட்டம் நத்தமேடு சிவன் கோயிலில் சேர மன்னன் வஞ்சிவேள் இரவிகுவான் மனைவி நிறந்தேவி குடையூர் மூலட்டானத்து மகாதேவர்க்கு திருஅமுது மற்றும் நொந்தா விளக்கு

எரிப்பதற்காக ஐம்பது பொன் கொடுத்து நிலத்தை விலைக்கு வாங்கி அதை கொடையாக கொடுத்துள்ளார்.

**அக்னீஸ்வரமுடையார் திருக்கோயில்:**

திருநெல்வேலி மாவட்டம் மேல்நத்தம் ஊரில் உள்ள அக்னீஸ்வரமுடையார் கோயிலில் சடையவர்மன் குலசேகர பாண்டியனின் 13ம் ஆட்சியாண்டில் மதுரை கைக்கோளர் பெருமாள் என்பவர் குன்றமெறிந்த பிள்ளையாரை எழுந்தருளச் செய்து அவ்விறைவனுக்கு அமுதுபடிக்காக 7½ அச்சு (காசுகள்) தானம் வழங்கியுள்ளார். இந்த அச்சுகளின் மூலம் வரும் வட்டியை கொண்டு வைகாசி மாதம் முதல் நாள் ஒன்றுக்கு இரண்டு நாழி அரிசி கொடுத்து திருவமுது கறியமுது, சந்தி விளக்கு உள்ளிட்ட நிவந்தங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளார்.

**திருஅமுதின் தற்சமய நிலை:**

" பெரியாரைப் பேணாது ஒழுகிற் பெரியாரால்
பேரா இடும்பை தரும்" – தன் குலத்தின் பெருமை உணர்ந்து அதன்படி

வாழாதவர்களுக்கு அக்குலத்தில் இருந்தே கேடு வரும். இன்றைய தமிழ் சமூகமும் அந்த நிலையில் தான் உள்ளது. கோயில்களையும் அதன் பெருமைகளையும் கால மாற்றத்தினால் வெறும் நடைமுறைகளாக இன்றைய தலைமுறையினர் கருதுகின்றனர். நம் தமிழ் சமூகத்தின் மரபுகளையும், மாண்புகளையும் எடுத்துச் சொல்லும் கோயில்கள், ஒரு பக்கம் அதிக பக்தர்களின் வருகையினால் வியாபார ஸ்தலமாகவும், மறுபக்கம் பக்தர்களும் வருமானமும் இல்லாமல் சிதிலமடைந்தும் வருகின்றன. வருமானத்தை அளவீடாகக் கொண்டு பெரிய கோயில்களில் ஆறு கால பூசைகளும், சிறிய கோயில்களில் ஒரு வேளை பூசையும் நடைபெறுகின்றன. கோயில் எத்தகையதாக இருப்பினும் பூசைக்கு தேவையான அனைத்து நிவந்தங்களும் முழுமையாக ஆகம விதிப்படி நடக்கின்றதா என்பது கேள்விக் குறியாக உள்ளது. ஒரே கலத்தில் சிறிய அளவு கொண்ட திருஅமுது மூலவர், நாச்சியார் உட்பட அனைத்து பரிவார தெய்வங்களுக்கும் ஏகமாக படைப்பது நம்முடைய மரபுகளுக்கு புறம்பானது. பெரும்பாலும் இரண்டு நாழி அரிசியமுதும், பல வகை கறியமுதும், நெய்யமுதும், தயிரமுதும் அடைக்காய் என்னும் பாக்கு, வெற்றிலை என ஒரு பூசையில் எந்த வகையான அமுதுகள் எவ்வளவு கொடுக்கப்பட்டன என கல்வெட்டுகளில் தெளிவாக இருந்தும் கால மாற்றத்தால் கோயில்களில் அவற்றை பின்பற்றுவது இல்லை. கோயில்களின் பெயரில் அதிக அளவில் நிலங்கள் இருந்தாலும், பக்தர்களின் காணிக்கை அதிகமாக இருந்தாலும் திருப்பள்ளித்தாமம் என்னும் மலர் மாலைகளை அணிவிப்பதில் உள்ள சிந்தனை கூட திருஅமுது படைப்பதில் யாருக்கும் இருப்பதில்லை. திருவமுதின் முக்கியத்துவம் கருதியே முன்னோர்கள் அதை உரிய முறையில் சிறப்பாகச் செய்து அவற்றை அனைவரும் அறியும் வகையில் கல்வெட்டுளிலும் பொறித்துள்ளனர்.

**முடிவுரை:**

பூசைகள் என்பது நீர் ஊற்றி, மாலை சாற்றி, திருஅமுது படைத்து மந்திரங்கள் ஓதுவது மட்டுமல்ல. அற்பணிப்பு உணர்வுடன் சான்றோர்களின் வழியில் கோயில்களின் மரபுகளையும், சமூகம் அந்தக் கோயில்களின் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையையும் காக்கும் பொருட்டு, இறைவர்க்கு ஆற்றும் தொண்டாக இருக்க வேண்டும். இங்கே மதம் முன் நிறுத்தப்படவில்லை, மாறாக ஆன்மீகத்தின் வழியில் தனிமனித ஒழுக்கம், சமூகத்தோடு இணைந்து வாழும் தன்மை, அறம்

செய்ய விளையும் மனப்பாங்கு என சமூகத்திற்கு தேவையான நற்பண்புகளை திருஅமுதுதிற்கான தானங்கள் வழியாக நம் முன்னோர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

"இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள" – என்னும் இந்த குறளுக்கு ஏற்றார் போல தமிழ்

சமூகம் வாழ்ந்துள்ளனர்.

**தரவுகள்:**

1. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி VI, கும்பகோணம் வட்டக் கல்வெட்டுகள், 2015.
2. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி – III – 2010.
3. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி VII, கும்பகோணம் வட்டக் கல்வெட்டுகள், 2015.
4. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி-XXIV, விழுப்புரம் மாவட்டக் கல்வெட்டு தொகுதி-VI, 2025.
5. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி-XXXI, சேலம் மாவட்டக் கல்வெட்டு தொகுதி-I, 2025.
6. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி-XXXII, செங்கற்பட்டு மாவட்டக் கல்வெட்டு தொகுதி-II, 2025.
7. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி-XXX, திருவள்ளூர் மாவட்டக் கல்வெட்டு தொகுதி-II, 2025.
8. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி - 17, திருவீழிமிழலைக் கல்வெட்டுகள் – 1994.
9. பாபநாசம் வட்டக் கல்வெட்டுகள் முதல் தொகுதி – 2004.
10. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி - VIII, தஞ்சாவூர் வட்டக் கல்வெட்டுகள் தொகுதி-II, 2016.
11. விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - II , தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண்:34, 2009.

**References:**

[1]. Tamilnadu Epigraphic volume-VI, Kumbakonam Vattak kalvettukal, 2015.
[2]. Tamilnadu Epigraphic volume – III – 2010.
[3]. Tamilnadu Epigraphic volume-VII, Kumbakonam Vattak kalvettukal, 2015.
[4]. Tamilnadu Epigraphic volume-XXIV, Viluppuram District Inscriptions Volume-VI, 2025.
[5]. Tamilnadu Epigraphic volume-XXXI, Salem District Inscriptions Volume -I, 2025.
[6]. Tamilnadu Epigraphic volume-XXXII, Sengarpattu District Inscriptions Volume -II, 2025.
[7]. Tamilnadu Epigraphic volume -XXX, Tiruvallur District Inscriptions Volume -II, 2025.
[8]. Tamilnadu Epigraphic volume - 17, Thiruveelimilalai Inscriptions – 1994.
[9]. Papanasam Vatta Kalvettukal Volume – 2004.
[10]. Tamilnadu Epigraphic volume - VIII, Thanjavur Vatta Kalvettukal Volume-II, 2016.
[11]. Viruthunagar District Inscriptions Volume-II, Tamilnadu Epigraphic Serial.No:34, 2009.